**நஷனல் ஸ்கூல் ஒவ் பிஸ்னஸ் மனேஜ்மென்ட் லிமிட்டட் – 2017**

---

நஷனல் ஸ்கூல் ஒவ் பிஸ்னஸ் மனேஜ்மென்ட் லிமிட்டட்டின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது. மேற்படி நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

கம்பனி அமைந்திருந்த காணியின் சார்பில் 2012 ஆம் ஆண்டில் 30 ஆண்டு குத்தகைக் காலப்பகுதிக்கான குத்தகைக் கட்டணத் தொகையாக ரூபா 112,000,000 தொகையை கம்பனியானது நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தியிருந்தது. அரசாங்க பிரதம மதிப்பீட்டாளரின் பெறுமதி கணிப்பீடு மற்றும் உள்ளக மதிப்பீட்டை ஒப்பீடு செய்து எவராவது ஒரு தரப்பினரால் ஏதாவது வேறுபாடு காணப்பட்டால் தீர்ப்பனவு செய்வதற்காக உள்ளக மதிப்பீட்டுக் குழுவின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு குத்தகைக் கட்டணத் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் காணி குத்தகையாளரின் காணியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இவ் அறிக்கைத் திகதி வரையிலும் இது தொடர்பாக கம்பனிக்கும் யூடிஏ இற்கும் இடையில் குத்தகை உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. மேலும் குத்தகைக் காலப்பகுதி 30 ஆண்டுகளாக இருந்த போதிலும் அவ் குத்தகையாளரின் காணியில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் பயன்தரு பொருளாதார ஆயுட்காலம் 50 ஆண்டுகளாக கருதப்பட்டிருந்தது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நஷனல் ஸ்கூல் ஒவ் பிஸ்னஸ் மனேஜ்மென்ட் லிமிட்டட்டின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிற்கானது தவிர கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதி விளைவுகள் அதற்கு எதிரான முன்னைய ஆண்டிற்கான ரூபா 88,976,022 வரிக்கு முன்னரான தேறியலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 416,276,107 வரிக்கு முன்னரான தேறிய நட்டத்தை விளைவித்திருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 505,252,129 ஆன வீழ்ச்சியொன்றை சுட்டிக்காட்டுகின்றது. கற்கைநெறிக் கட்டண வருமானம் ரூபா 981,716,959 ஆல் அதிகரித்திருந்த போதிலும் சம்பளங்கள், விளம்பரம், பெறுமானத்தேய்வு மற்றும் வட்டிச் செலவினங்கள் மற்றும் வெளிநாட்டுப் பணவனுப்பல்கள் என்பன ரூபா 1,421,694,053 ஆல் அதிகரித்தமை இந்த பின்னடைவிற்குப் பிரதானமாக பங்களித்திருந்தன.

மீளாய்வாண்டின் போது வரிக்கு முன்னரான தேறியலாபம் குறைவடைந்திருந்த போதிலும் ஊழியர் சம்பளங்கள் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை கணக்கிற்கு எடுத்ததன் பின்னர் 2015 ஆம் ஆண்டிற்கான ரூபா 377,123,442 பெறுமதிச் சேர்க்கை 2016 ஆம் ஆண்டில் ரூபா 1,059,099,611 வரை குறைவடைந்திருந்ததுடன் இது மீளாய்வாண்டில் ரூபா 210,780,232 வரை மீண்டும் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

கம்பனியானது பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் மீதான வருடாந்த இலக்குகளை நிர்ணயித்திருக்காததுடன் கம்பனியின் பிரதான நடவடிக்கைகள் தொடர்பாக பௌதீக மற்றும் நிதி இலக்குகளை சுட்டிக்காட்டுவதன் மூலம் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமானது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்பாடு மற்றும் மீளாய்வு

(அ) வருடாந்த இலக்குகள் காணப்படாததன் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளுடன் உள்ளபடியான செயலாற்றலை ஒப்பீடு செய்ய முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது விளம்பரங்களிற்காக ரூபா 119,962,476 செலவினத்தை கம்பனி செலவிட்டிருந்த போதிலும் வெளிநாட்டு மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்காக எவ்வித மேம்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் பட்டப் படிப்பு மற்றும் பட்டப்பின் படிப்புக்களிற்கு 6,363 சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 13,062 பதிவு செய்யப்பட்ட மொத்த மாணவர்களில் 5 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 730 மாணவர்கள் கம்பனி ஆரம்பித்ததிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை கற்கைநெறிகளை விட்டுச் சென்றிருந்தனர்.

### 4.2 சொத்துக்களை பயன்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொறியியல் பாடசாலையானது ஏறத்தாழ 684 மாணவர்களிற்கு வசதிகளை வழங்கும் இயலளவுடன் 02 வடிவமைப்பு புகைப்படக்கூடங்கள், 06 விரிவுரை மண்டபங்கள், 06 கணனி ஆய்வுகூடங்களை கொண்டிருந்த போதிலும் 2018

செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு கல்வி கற்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 182 மாத்திரமே ஆகும்.

(ஆ) மாணவர் விடுதியிலுள்ள 250 அறைகளில் வெளிநாட்டு மாணவர்களிற்காக ஒதுக்கப்பட்டிருந்த 23 குளிரூட்டப்பட்ட அறைகள் ஆரம்பத்திலிருந்து பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) நிலையான சொத்துப் பதிவேடானது ஒவ்வொரு பொருளினதும் பெறுமதி, சேர்த்தல் மற்றும் அகற்றல் என்பவற்றை உள்ளடக்கி முறையாக நாளதுவரையாக்கப்பட்டிருக்காததுடன் கம்பனியின் ஒவ்வொரு பிரிவினாலும் பொருளிருப்பு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பொருள் மெய்மையாய்வுக் குழுவால் இனங்காணப்பட்டிருந்த அகற்றப்படக்கூடிய பொருட்கள் 2018 செப்தெம்பர் 30 வரையிலும் அகற்றப்பட்டிருக்கவில்லை.

**4.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான கம்பனியின் உள்ளபடியான பதவியணியினர் 156 ஆகக் காணப்பட்ட போதிலும் கம்பனியில் குறித்துரைக்கப்பட்ட பதவியணி காணப்படாததுடன் கம்பனியானது நடவடிக்கைகள் மற்றும் இயலளவுகளை இனங்காண்பதன் மூலம் பதவியணி நிலைகளின் எண்ணிக்கையை தீர்மானித்திருக்கவில்லை.

(ஆ) 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பந்தியின் பிரகாரம் பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் ஒருமைப்பாட்டுடன் உரிய அமைச்சால் ஆட்சேர்ப்புத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினரிற்கான 50 சதவீத சம்பள அதிகரிப்பு 2016 ஆகஸ்ட் 18 இல் நடைபெற்ற கூட்டத்தில் பணிப்பாளர் சபையால் 2016 ஆகஸ்ட் மாதத்திலிருந்து அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 9.7 ஆம் பந்தியின் பிரகாரம் பொதுத் திறைசேரியிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. குறிப்பிட்ட சில உத்தியோகத்தர்களிற்கான சம்பள ஏற்றங்கள் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளை விஞ்சி வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 பெறுகை மற்றும் ஒப்பந்தச் செயன்முறை**

பின்வரும் அவலதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் பிரதான பெறுகைத் திட்டம் மற்றும் விபரமான பெறுகைத் திட்டம் என்பன வழிகாட்டிகள் மூலம் வழங்கப்பட்ட மாதிரியின் பிரகாரம் கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கம்பனியின் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| மனித வள முகாமைத்துவம் | பதவியணி நிலைகள் இனங்காணப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| சொத்து முகாமைத்துவம் | நிலையான சொத்து மற்றும் இருப்புப் பதிவேடுகள் பேணப்படாமை மற்றும் குறைப்பயன்பாடுடைய மற்றும் விளைவற்ற சொத்துக்கள் அவதானிக்கப்பட்டமை. |